# 4. கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை.

மாநிலத்தின் பொருளாதாரத்தில் கால்நடை பராமரிப்பானது மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு இன்றியமையாத பால் மற்றும் இறைச்சி போன்ற உணவு வகைகளை பெருக்குவது அத்தியாவசியமாகும். தமிழ்நாட்டில் கால்நடை பெருக்கம் மற்றும் பராமரிப்பு, கோழிப்பண்ணைகள் அமைத்தல் ஆகிய திட்டப் பணிகளைப் பொறுத்த வரையில் அரசாணை (நிலை) எண் 200, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் (காப.2) துறை, நாள். 22.8.97 மூலம் (அ) துணை மையங்களில் செயற்கை முறையில் இனப் பெருக்கம் செய்யும் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறை விந்து வங்கு திட்டம், பன்றி வளர்ப்பு திட்டம் போன்ற திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனீட்டாளர்களை கண்டறிதல், பால் பண்ணை கூட்டுறவு சங்கங்களுக்கு திட்ட செயல்பாட்டில் உதவி செய்தல், ஆகிய அதிகாரங்களை கிராம ஊராட்சிகளுக்கும், (ஆ) கால் நடை துணை மைய திட்டம், இறைச்சிக் கொட்டில்கள் பராமரிப்பு, பன்றி வளர்ப்பு, முயல் மற்றும் கோழி வளர்ப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கான பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், (இ) மேற்கண்ட திட்டங்களை தீட்டுவதிலும், செயல்பாட்டினை மேற்பார்வையிடவும் வேண்டிய அதிகாரங்களும் பொறுப்புக்களும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆராய்ந்த குழு, மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் தேவையான அதிகாரங்களை வழங்கும் பொருட்டு கீழ்கண்ட பரிந்துரைகளை செய்கின்றது.

### கிராம ஊராட்சிகள்.

1. கால் நடை மற்றும் கோழி இனங்களை நல்லமுறையில் பராமரிக்க ஏதுவாக, கால்நடைகளுக்கு நோய் மற்றும் தொற்றுநோய் பரவுதலின் விவரங்ளை கால்நடைபராமரிப்புத்துறை உதவி இயக்குநரிடமோ, ஊராட்சி ஒன்றிய கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரிடமோ அறிவிக்கலாம்.

2. கால்நடை இறைச்சி வெட்டும் கூடங்களில் நடக்கும் பணிகளை அவ்வப்போது மேற்பார்வையிட்டு, குறிப்புகளை பதிவு செய்யவேண்டும்.
3. இறைச்சி வெட்டும் கூடங்களை நல்ல முறையில் பராமரிக்கலாம்.

4. சமுதாய புல்வெளியில் தீவன பண்ணைகளைகள் அமைத்து, தீவனத்தை அபிவிருத்தி செயய்யலாம்.

5. பால்பண்ணை கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து தீவன உற்பத்திக்காகச் சமுதாய நிலங்களை வாங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

6. சமுதாய மேய்ச்சல் நிலங்களில் மற்றும் புல்வெளிகளில் கால்நடைகள் மேய்வதைக் கட்டுப்படுத்த கட்டணம் விதிக்கலாம்.

7. உள்ளூரில், உள்ளூர் தீவன வங்கி ஏற்படுத்தி வறட்சி மற்றும் பற்றாக்குறை காலங்களில் தீவனத்தை பங்கிட்டு அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

8. தீவன விதைகள், கன்றுகளை கிராமங்களுக்கு பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யலாம்.

9. உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் சேகரிக்கும் மையங்கள் கிராமத்தில் கோழி அபிவிருத்தி செய்யவும் தகுதியான வசதி செய்து தரலாம்.
10. கால்நடை மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. அவற்றில் கீழ்காணும் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிய கிராம ஊராட்சிகள் உதவலாம்.

அயல்நாட்டு கால்நடைகளைப பெறுதல். உள்நாட்டு இனப் பெருக்க கால்நடைகள்/ எருமைகள் மேம்பாடு. தீவனம் மற்றும் விதை உற்பத்திப் பண்ணை விலங்குகளையும் பறவைகளையும் பகிர்வு செய்தல், சிறப்புப் பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான திட்டங்கள், திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கும் எருமைகளுக்கும் ஊசி போடுதல், கோழியின் சேய் நோய்நாடு துயிலகம் அமைத்தல் மற்றும் வான் கோழிப்பண்ணை அமைத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்.

1. உள்ளூர் தேவைகளுக்கும், அது மட்டுமின்றி தேசீய வேளாண்மைக் குழுவில் குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி கால் நடை பணிகளுக்காகவும் புதிய கால்நடை மருத்துவ மனைகளை அமைக்கலாம்.

2. தற்போது இயங்கி வரும் கால்நடை மையங்ளை சீராக பராமரிக்கலாம்.

3. பல்வேறு திட்டத்தில் பயனாளிகளுக்கு தரமான கால்நடைகளை விநியோகம் செய்யலாம்.

4. நல்ல தரமான இனவிருத்தி செய்யும் உயர்ரக கால்நடைகளைப் பற்றி விவசாயிகளிடம் செய்தி பரப்பலாம்.

5. கால்நடைகளுக்கான இனப் பெருக்கப்பண்ணை நிறுவி, அவற்றை மேம்படையச் செய்யலாம்.

6. தனியார் இனவிருத்தி மையங்கள் மற்றும் குஞ்சு பொரிப்பகங்களுக்கு உரிமம் வாங்கலாம்.

7. ஊராட்சி ஒன்றியக்குழுவில் உள்ள கால்நடை தொடர்பான மருத்துவப் பணி நடவடிக்கைகளை மேற்பார்வையிடலாம்.

8. கால்நடைகளுக்கான மருத்துவ கவனிப்பை மறு ஆய்வு செய்யலாம்.

9. கால்நடைகளுக்கு, ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நோய்கள், மற்றும் குறிப்பாக தொற்றுநோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.

10. தீவன அபிவிருத்திக்காக, தீவன உற்பத்தி பயிற்சி முகாம்களை அமைத்து, நிதி உதவி அளிக்கலாம்.
11. கோழி வளர்ப்பவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் கோழி தீவனம் வழங்கவும் ஆவன செய்யலாம்.

12. உள்நாட்டு இனப்பெருக்கக் கால்நடைகள்/ எருமைகள் மேம்பாடு , காளை மாடுகளின் விந்து பரிசோதனை ( வழித்தோன்றல் பரிசோதனை) திட்டம், ஈனாத கன்று உற்பத்தித்திட்டம், ஐரோப்பிய பொருளாதார குழு உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் மற்றும் விலங்குகளையும் பறவைகளையும் பகிர்வு செய்தல் போன்ற இதரத் திட்டங்களையும் மேற்பார்வை செய்யலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்.

1. மாவட்ட ஊராட்சிகளில் கால்நடை பெருக்கத்திற்கும் மருத்துவப் பணிகள். விவசாயிகளின் ஆண்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தலையும் திட்டமிடுதல். மாவட்டங்களிலுள்ள கால்நடை அபிவிருத்தியின் எதிர்தோன்றும் சிக்கல்களையும், எதிர்கால விளைவுகளையும் கணக்கெடுத்து ஆராய்ச்சி ஆகியவற்றை திட்டமிடலாம்.

2. வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாகவும் மாவட்டங்களில் செயல்படும் கால் நடை அபிவிருத்தித் திட்டங்ளை செயல் திட்டங்களை காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்தல். அவ்வாய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை இணை/ துணை இயக்குநர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொள்ளுதல்.

3. மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு கோழியின வளர்ப்பு கழகப் பணிகளை ஆய்வு செய்தல்.

4. அயல்நாட்டு கால்நடைகளைப் பெறுதல் ,காளை மாடுகளின் வழித்தோன்றல் பரிசோதனை , ஈனாத கன்று உற்பத்தித் திட்டம் பணிகளை ஆய்வு செய்தல்.

5. சிறப்பு பகுதி மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான திட்டங்களை ஆய்வு செய்தல். ஐரோப்பிய பொருளாதார குழு உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம், மற்றும் கால் நடைகள் தொடர்புடைய கால்நடை மருத்துவ சுகாதாரத் திட்டங்களை மேற்பார்வை செய்யலாம்.